Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 112/2023

## Deposition of P.W.6

| | | |
|---|---|---|
| Name | : | கலைசெல்வன் |
| Father's Name | : | வேலாயுதம் |
| Village | : | மேட்டுப்பட்டி |
| Age | : | **60/2025** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 01.04.2025**
(3,4 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். 1, 2, 5 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. 1, 2, 5 எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

<u>**முதல்விசாரணை**</u>

நான் தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று மேட்டுப்பட்டியில் வசித்து வருகிறேன். கடந்த **05.10.2022**ஆம் தேதி ஆலங்குடி காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணிபுரிந்துவந்தபோது சம்மட்டிவிடுதி காவல்நிலைய உதவி ஆய்வாளர் பொறுப்பை கூடுதலாக கவனித்து வந்தேன். அன்றைய தினம் சம்மட்டிவிடுதி காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் ஆறுமுகம் என்பவர் நிலையபொறுப்பில் இருந்தபோது கல்லுவிடுதியை சேர்ந்த மலையாண்டி மகன் முத்துசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று நிலையக்குற்ற எண். **157/2022** இதச பிரிவு **379** ன் கீழ் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். சிறப்பு உதவி ஆய்வளார் ஆறுமுகம் என்பவரால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.**5**ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சிறப்பு உதவி ஆய்வாளர் ஆறுமுகம் அதே தினம் மாலை **5.00** மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராமசாமி, மாரியப்பன் ஆகியோர் முன்பு சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வைமகசர் ஆகியன தயார்செய்துள்ளார். சிறப்பு உதவி ஆய்வாளர் ஆறுமுகம் என்பவரால் தயார் செய்யப்பட்ட மாதிரி வரைபடம் அசாஆ.**6**ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**2.** பின்னர் சாட்சிகள் முத்துசாமி, ஆறுமுகம், ராஜேந்திரன், ராமசாமி, மாரியப்பன் ஆகியோரை விசாரணை செய்து அவர்களது வாக்குமூலங்களை தனித்தனியே பதிவு செய்துள்ளார். வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில் **24.11.2022**ஆம் தேதி காலை **9.00** மணியளவில் நான் போலிஸ் பார்ட்டியுடன் இச்சடி பஸ் ஸ்டாப் அருகே வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது சந்தேகத்திற்கு இடமான வகையில் வந்த **TN 07 BC 2696** என்ற

பதிவெண் கொண்ட சில்வர் நிற சுவிப்ட் டிசையர் காரில் வந்த **5** நபர்களை விசாரித்தபோது அவர்களது பெயர்கள் அய்யப்பன், முருகேசன், குமார், ராமராசு, ஜோதிநாகூர் என்று தெரியவந்தது. அவர்களை விசாரித்தபோது முன்னுக்குபின் முரணாக பெயர் முகவரியை மாற்றி கூறினார்கள். எனவே, அவர்களை மீண்டும் விசாரித்தபோது சம்மட்டிவிடுதி காவல் நிலைய குற்ற எண்.**148/2022, 156/2022, 157/2022,** சட்டப்பிரிவு **379** இதச கீழான வழக்குகளிலும் தொடர்புடையவர்கள் என்று தெரியவந்ததால் மேற்படி **5** பேரையும் காரணம் கூறி கைது செய்து அவர்களில் அய்யப்பன் என்பவரை சாட்சிகள் ராமசுப்பிரமணியன், சரத்குமார் ஆகியோர் முன்னிலையில் விசாரித்தபோது **1**வது எதிரி அய்யப்பன் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மை நகலில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.**7**ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**3.** பின்னர் எதிரி அய்யப்பன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அதே தினம் மதியம் **2.45** மணியளவில் முள்ளிக்காப்பட்டி கிராமத்தில் உள்ள **1**வது எதிரி அய்யப்பன் என்பவரது வீட்டின் அருகே உள்ள பட்டியிலிருந்து **1**வது எதிரி மேற்படி சாட்சிகள் ராமசுப்பிரமணியன், சரத்குமார் ஆகியோர் முன்னிலையில் அடையாளப்படுத்தி ஆஜர் செய்த வழக்கு சொத்துகளான **1. TN 07 BC 2696** என்ற பதிவெண் கொண்ட சில்வர் நிற சுவிப்ட் டிசையர் கார் ஒன்று, **2. TN 10 Y 3137** என்ற பதிவெண் கொண்ட சில்வர் நிற யுனோவா கார் ஒன்று, **3.** வெள்ளாடுகள் **- 48** ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜரின் உண்மை நகல் அ.சா.ஆ.**8**ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் ராமசுப்பிரமணியன், சரத்குமார் ஆகிய இருவரையும் விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் கைது செய்யப்பட்ட எதிரிகள் **5** பேர் மற்றும் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகளுடன் நிலையம் வந்து எதிரிகளுக்கு திரேக பரிசோதனை முடித்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன்.

**4.** கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகளான **1. TN 07 BC 2696** என்ற பதிவெண் கொண்ட சில்வர் நிற சுவிப்ட் டிசையர் கார் ஒன்று, **2. TN 10 Y 3137** என்ற பதிவெண் கொண்ட சில்வர் நிற யுனோவா கார் ஒன்று, **3.** வெள்ளாடுகள் **- 3** ஆகியவற்றை படிவம் **91**இன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் **91 (ஆர்.பி.எண்.89/2023)** அ.சா.ஆ.**9**ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிறகு சம்மட்டிவிடுதி காவல் நிலைய உதவி ஆய்வாளராக சமுத்திரராஜன் பொறுப்பேற்றுக்கொண்டதால் வழக்கு கோப்பினை அவரிடம் ஒப்படைத்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் எப்போது, யாரிடமிருந்து வழக்கு கோப்பினை பெற்றேன் என்றால் எப்போது யாரிடமிருந்து வழக்கு கோப்பினை பெற்றேன் என்பது எனக்கு ஞாபகம் இல்லை. நான்

**24.11.2022** அன்று காலை **11.30** மணிக்கு இச்சடி என்ற பகுதியில் வாகன தணிக்கை செய்துகொண்டிருந்தபோது எதிரிகள் **5** பேரும் சுவிப்ட் டிசையர் என்ற ஒரே காரில் வந்ததாக ஒப்புதல் வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான ராமசுப்பிரமணியன், சரத்குமார் ஆகிய இருவரும் நான் எதிரிகளை கைதுசெய்தபோது அந்த வழியாக இருசக்கர வாகனத்தில் வந்தார்கள் என்றால் சரியல்ல, அந்த இடத்தில் நின்றுகொண்டிருந்தார்கள். நான் சாட்சிகள் ராமசுப்பிரமணியன், சரத்குமார் ஆகிய இருவரையும் விசாரித்து அவர்களது வாக்குமூலங்களை பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். நான் விசாரணை முடித்து வழக்கு கோப்புகளை யாரிடம் ஒப்படைத்தேன் என்றால் உதவி ஆய்வாளர் சமுத்திரராஜன் வசம் ஒப்படைத்தேன்.

**2.** நான் தயார் செய்த கைப்பற்றுதல் மகஜரில் **(அ.சா.ஆ.8)** மொத்தம் **40** வெள்ளாடுகளை கைப்பற்றியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். **24.11.2022** அன்று எதிரிகளை நான் கைது செய்தபோது அன்றைய தினம் எதிரிகளிடமிருந்து ஆடுகள், கார் கைப்பற்றிய பிறகு வேறு எந்த நாளிலும் எந்த பொருளும் எதிரிகளிடமிருந்து என்னால் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். சம்மட்டிவிடுதி காவல்நிலைய குற்ற எண்**.148/2022,** இதச பிரிவு **379** வழக்கின் சொத்துகளையும் நான்தான் எதிரிகளிடமிருந்து கைப்பற்றினேன் என்றால் சரிதான். சம்மட்டிவிடுதி காவல்நிலைய குற்ற எண்**.148/2022,** இதச பிரிவு **379** வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில் **24.11.2022** அன்று நான் எதிரிகளை கைதுசெய்து ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மொத்தம் எத்தனை ஆடுகளை கைப்பற்றினேன் என்றால் **40** ஆடுகள் கைப்பற்றினேன். சம்மட்டிவிடுதி காவல்நிலைய குற்ற எண்**.148/2022,** இதச பிரிவு **379** வழக்கில் காண்பிக்கப்பட்டுள்ள அசல் கைப்பற்றுதல் மகஜரில் **48** வெள்ளாடுகள் கைப்பற்றப்பட்டதாக காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல, **40** ஆடுகள்தான் கைப்பற்றினேன்.

**3.** நான் சொல்வதுபோல் எதிரிகளிடமிருந்து எந்தவிதமான வழக்கு சொத்துகளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், எதிரிகளை சொன்ன நாள், நேரம், இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றாலும், எதிரிகள் என்னிடம் எந்தவிதமான ஒப்புதல்வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றாலும் சரியல்ல. காவல் நிலையத்தில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட வழக்கில் எதிரிகளை பொய்யாக சேர்த்து சாட்சிகளின் வாக்குமூலங்களை எதிரிகளுக்கு எதிராக பொய்யாக உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை